*TNVR060004532022*
*J.M.2 Court, Sattur* *C.C. No.35 of 2022* *Dated: 05.08.2026*

FORM NO. 124
JUDICIAL MAGISTRATE NO:II COURT– SATTUR
JUDGEMENT IN CALENDER CASE NO 35/2022
ON THE FILE OF JUDICIAL MAGISTRATE NO:II, COURT – SATTUR

| | |
|---|---|
| Complaint | அரசுக்காக:– காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.324/2019) |
| Accused | திரு.பாண்டி என்ற சின்னப்பாண்டி, த/பெ.திரு.குருசாமி என்ற மந்திரம் |
| Offence | குற்றம்சாட்டப்பட்டது :– இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2)<br>குற்றச்சாட்டு வனையப்பட்டது:– இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) |
| Finding | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து கு.வி.மு.ச. பிரிவுகள் 248(1)ன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| Sentence | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |

| Description of the Accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sl. No. (1) | Name (2) | Father's Name/ Husband's Name (3) | Caste or race | Occupation (4) | Residence (5) | age (6) |
| 1. | பாண்டி என்ற சின்னப்பாண்டி | குருசாமி என்ற மந்திரம் | இந்து | தொழிலாளி | அம்மையார்ப்பட்டி | 53 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Occurrence (7) | Complaint (8) | Apprehension of appearance (9) | Release on Bail (10) | Commencement of trail (12) | Close of Trial (13) | Sentence or Order (14) | Explanation of delay (16) |
| 03.09.2019 | 05.09.2019 | 05.09.2019 | 20.09.2019 | 13.05.2022 | 29.07.2026 | 05.08.2026 | |

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் :– 08.03.2022
குற்ற இறுதி அறிக்கை கோப்புக்கு எடுத்த நாள் :–08.03.2022
இதன் நகல் :– மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:12:02 +0530

Judicial Magistrate, No.II Sattur

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 35/2022
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், வெம்பக்கோட்டை காவல் நிலையம். (குற்ற எண்.324/2019) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.பாண்டி என்ற சின்னப்பாண்டி, (வயது 53/26) த/பெ.திரு.குருசாமி என்ற மந்திரம், பொன்னகரம், அம்மையார்பட்டி. |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 03.09.2019 |
| 8. | புகார் தேதி (Complaint) | 05.09.2019 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 05.09.2019 |
| 10. | எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 20.09.2019 |
| 11. | Commitment | |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 13.05.2022 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 29.07.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழ் வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் இருந்து கு.வி.மு.ச. பிரிவுகள் 248(1)ன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 29.07.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.முத்துக்கண்ணு, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும்,



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:12:09 +0530

இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

1. **குற்றச்சாட்டு :-**

03.09.2019 ம் தேதி சாயங்காலம் தன் சொந்த வேலையாக திருவேங்கடம் சென்று விட்டு மறுபடியும் ஊருக்கு திரும்ப இரவு 08.15 மணிக்கு திருவேங்கடத்தில் இருந்து மதுரை செல்லும் பஸ்ஸில் ஏறி உட்கார்திருந்த போது புகார்தாரருக்கு பின்னால் பஸ்ஸில் ஏறிய எதிரி பாண்டி என்ற சின்னபாண்டி புகார்தாரரின் தோளில் இடித்துள்ளார். பின்னர் ராத்திரி சுமார் 08.35 மணிக்கு அம்மையார்பட்டி விலக்கில் பஸ் நின்றவுடன் புகார்தாரர் பஸ்ஸில் இருந்து இறங்கி ஊருக்கு நடந்து போகும் வழியில் புகார்தாரருக்கு பின்னாலேயே அசிங்கமாக திட்டிக்கொண்டே வந்துள்ளார். பின்னர் 03.09.2019 ம் தேதி இரவு 08.45 மணிக்கு எதிரி தன்னை கடந்து போகட்டும் என்று எலக்ட்ரிக் போஸ்ட் லைட் வெளிச்சத்தில் புகார்தாரர் நின்ற போது புகார்தாரரின் அருகில் வந்த எதிரி சின்னப்பாண்டி புகார்தாரரைப் பார்த்து "நீ எல்லாம் பெரிய இவனா டா தேவிடியா மகனே முதலியார் கூதி மகனே" என்று அசிங்கமாக திட்டி "ஏண்டா பஸ்ல வச்சு என்னை முறைச்ச தேவிடியா மகனே" என்று அசிங்கமான கீழ்நோக்கு வார்த்தைகளால் புகார்தாரரை திட்டி புகார்தாரருக்கு அருவருப்பை ஏற்படுத்தியுள்ளார். புகார்தாரரை அடிக்க முயன்ற போது புகார்தாரர் எதிரியை தடுத்து எதிரி தன் இடுப்புக்கு பின்னால் வைத்திருந்த ஒரு சிறிய கத்தியை சடாரென எடுத்து புகார்தாரரை இடது பக்க தொடையில் குத்தி சாதாரண காயம் ஏற்படுத்தியுள்ளார். சாட்சிகள் அருகில் வந்தவுடன் தன் கையில் இருந்த கத்தியுடன் புகார்தாரரைப் பார்த்து "இன்னைக்கு ஆட்கள் வந்ததால என் கிட்ட இ்ருந்து தப்பிச்சு கிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை இந்த கத்தியால குத்தி கொல்லாமல் விட மாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **குு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல் :-**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. **கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை :-**

எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழான குற்றங்களுக்கு



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.05 18:12:12 +0530

குற்றச்சாட்டுக்கள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. <u>அரசு தரப்பு சாட்சிகள் </u>:-

பட்டியல் சாட்சிகளில் இருந்து ஒரு நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.பால்ராஜ் என்பவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :-

**5.1.** 03.09.2019ம் தேதி இரவு 08.45 மணியளவில் அவரது ஊர் பேருந்து நிலையம் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரி அ.சா.1 – கணேசனை பார்த்து ஆபாசமான வார்த்தைகளால் பேசி, தன்னுடைய இடுப்பிற்கு பின்னால் வைத்திருந்த கத்தியை எடுத்து, அ.சா.1 – கணேசனின் இடது பக்க தொடையில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார். பின்பு அங்கிருந்தவர்கள் வந்தவுடன் எதிரி பாண்டி என்ற சின்னப்பாண்டி அ.சா.1–கணேசை கத்தியைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்.

**5.2.** இந்த சம்பவத்தில் தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அ.சா.1 – கணேசன் சென்றார். அவர் அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது 05.09.2019ம் தேதி காலை 06.00மணிக்கு அங்கு விசாரிக்க சென்ற தலைமை காவலர் தமிழ்ழகனிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அதன் அடிப்படையில் குற்ற எண் 24/2019 பிரிவுகள் 294(b), 324, 506(2) இ.த.ச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார்.

**5.3.** வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.இராமமூர்த்தி சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர்(அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம்(அ.சா.ஆ.5) தயார் செய்தார். மேலும் சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைத் தனித்தனியாகப் பதிவு செய்தார்.

**5.4.** 13.09.2019–ம் தேதி அ.சா.1–கணேசனுக்கு சிகிச்சை அளித்த சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.விசு என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றைப் (அ.சா.ஆ.6) பெற்று, அவரின் வாக்குமூலத்தையும்



S
VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:12:16 +0530

பதிவு செய்தார். மேலும் 17.10.2019–ம் தேதி அ.சா.1–கணேசனுக்கு மேல்சிகிச்சை அளித்த விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சரண்யா என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றைப் (அ.சா.ஆ.7) பெற்று, அவரது வாக்குமூலத்தையும் பதிவு செய்தார். அவருடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரி மீது 294(b), 324, 506(2) இ.த.ச–ன் கீழான குற்றத்திற்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை</u> :–

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார். மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்.

7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>:–

எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழ் வனைந்துள்ள குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–

**8.1.** இந்த வழக்கில் காயம்பட்ட நபரும் புகார்தாரருமான கணேசன், அரசு தரப்பு முதலாவது சாட்சியாக (அ.சா.1) விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தில், சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு 08.30 மணியளவில் தன்னுடைய ஊர் பேருந்து நிலையத்தில் வைத்து அடையாளம் தெரியாத நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றும்; அப்போது அந்த கூட்டத்திலிருந்த ஒரு நபர் ஏதோ பொருளை வைத்து தனது வலது தொடையில் குத்திவிட்டார் என்றும்; அதனால் தனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும்; இரவு நேரமாக இருந்ததால் தன்னை தாக்கிய நபர் யார் என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்குச் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றதாகவும்; அங்கு வந்த காவல்துறையினரிடம் புகார் மனு அளித்ததாகவும்; அ.சா.ஆ.1 – புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும் அ.சா.1–கணேசன் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.2.** அ.சா.1 – கணேசன் அவருடைய முந்தைய வாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் உள்ள சங்கதிகளுக்கு முரணாகச் சாட்சியம் அளித்ததால், அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். ஆனாலும், அவரிடமிருந்து


S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:12:19 +0530

அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாகச் சாட்சியம் எதுவும் பெறப்படவில்லை. மேலும், அவர் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், எதிரி தாக்கல் செய்துள்ள சமாதான மனுவில் (அ.சா.ஆ.2) கையொப்பம் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.3.** எனவே, அரசு தரப்பில் இதர சாட்சிகள் விடுவித்துக்கொள்ளப்பட்டு, கூடுதல் சாட்சியாகச் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 – திரு.பால்ராஜ் விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான விபரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தைத் தவிர, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியங்கள் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8.4.** மேலும், அ.சா.ஆ.1 ஆகிய புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று அ.சா.1 ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிப்படுத்தச் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகாரை அ.சா.1 தான் கொடுத்தாரா என்பதும் சந்தேகம்கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1–ன் சாட்சியம் மூலம் புகார் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.5.** எனவே, கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள உதவி ஆய்வாளரைத் தவிர, இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கூடுதல் சாட்சியும் புலன் விசாரணை தொடர்பான சங்கதிகளை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால், அது மட்டுமே எதிரியைக் குற்றவாளி என்று முடிவு செய்யப் போதுமானதல்ல.

**8.6.** இதன்மேல் பரிசீலனை செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களின் ஒட்டுமொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கினை நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9. <u>முடிவு</u> :–**

**9.1.** எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324, 506(2) இன் கீழும் வனைந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார்.



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.08.05 18:12:23 +0530

9.2. இவ்வழக்கில் எதிரி ஆஜராகி எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது

9.3. இவ்வழக்கில் சான்று பொருள் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 05.08.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.05 18:12:26 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.கணேசன் (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.பால்ராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 05.09.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 04.05.2026 | சமாதான மனு |
| அ.சா.ஆ.3 | 05.09.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 05.09.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 05.09.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 03.09.2019 | அ.சா.1 க்கு சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.விசு வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |
| அ.சா.ஆ.7 | 07.09.2019 | அ.சா.1 க்கு விருதுநகர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.சரண்யா வழங்கியவிபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள் :–** இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள் :–** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள் :–** இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.08.05 18:12:30 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்

**குறிப்பு :–**

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.